## IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | **47/2017** |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Arumugam | CASTE | : | |
| W/O. | Muthukaruppan @ Periyan samban | RELIGION | : | **இந்து** |
| VILLAGE | அய்யங்கோட்டை | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | 61 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 20.11.2024**

<u>**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**</u>

1. நான் தற்போது அய்யங்கோட்டை காலனியில் குடியிருந்து வருகிறேன். வழக்குச்சொத்து எனக்கு கொடுக்கவேண்டும் என்று கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். வழக்குச்சொத்திற்கான பட்டா தற்போது வரை எனது அப்பா பெயரில் உள்ளது. எனது உடன்பிறந்த நபர்கள் மச்சம்மாள், மனோகரன், ராஜேந்திரன், ஆறுமுகம், லெட்சுமி ஆகியோர்கள். ராஜேந்திரன் தற்போது இறந்துவிட்டார். ராஜேந்திரனின் இறப்புச்சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை.

2. குடும்ப பொது சொத்தில் அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் பங்கு உண்டு.27.01.2016 ல் பிரதிவாதி பெயரில் வழக்குச்சொத்திற்கு அனுபந்த பட்டா கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்குத்தெரியாது. எனது அப்பா பெயரில் உள்ள சொத்தை மற்ற சகோதர சகோதரிகளுக்கு பாகம் கொடுக்கக்கூடாது என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.எனது நிரூபண வாக்குமூலத்திலும், பிராதிலும் ஒரே விவரங்களைத்தான் சொல்லியுள்ளேன்.

3. வா.சா.ஆ–2 ல் பாகப்பத்திய விடுதலைப்பத்திரம் பொய்யானது என்றால் சரியல்ல. மேற்படி பத்திரத்தில் கோபால், அய்யணன் ஆகியோர் சாட்சி கையெழுத்திட்டுள்ளார்கள்.கோபால் அப்பா பெயர் நாராயணன். அய்யணன் அப்பா பெயர் எனக்குத்தெரியாது. வழக்குச்சொத்து அரசாங்கம் எனது அப்பாவிற்கு ஒப்படைக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனது அப்பா பெயரில் கிரையம் பெற்ற

வேறு 2 சொத்துக்கள் எனது குடும்பத்திற்குபொதுவான சொத்துக்கள். வா.சா.ஆ.2 பத்திரத்தில் பிரதிவாதி கையொப்பம் மட்டும்தான் உள்ளது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ.2 பத்திரத்தில் பிரதிவாதி கையெழுத்தை நான் மேற்சொன்ன 2 சாட்சிகள் முன்னிலையில்தான் வாங்கினார்கள் என்றால் சரிதான். பாகப்விடுதலைப்பத்திரத்தில் அனைத்து வாரிசுகளிடமும் நான் கையெழுத்து பெறவேண்டும் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பத்திரத்தை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பத்திரத்தில் பிரதிவாதி கையெழுத்து செய்யவில்லை, நானே கையெழுத்து போட்டுக்கொண்டேன் என்றால் சரியல்ல.நான் சொல்வதுபோல் பாகவிடுதலைப்பத்திரம் ஏற்படுத்தியிருந்தால் மற்ற வாரிசுகளிடம் கையெழுத்து வாங்கியிருப்பேன், அதை பதிவு செய்திருப்பேன் என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.2 பத்திரத்தில் மற்ற வாரிசுதாரர்கள் கையொப்பம் செய்யாததால் செல்லாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ல் வீட்டுவரி செலுத்துபவர் பெயராக எனது பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 மின்கட்டண ரசீது எனது பெயரில்தான் உள்ளது. மின்இணைப்பு கொடுக்கும்போது மற்ற வாரிசுதாரர்கள் அவர்களுக்கு ஆட்சேபணையில்லை என்று கடிதம் கொடுத்தார்கள். அந்த கடிதத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. வழக்குச்சொத்து என்னுடைய சொத்து என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மற்ற வாரிசுகளை நான் இந்த வழக்கில் சேர்க்கவில்லை. எனது அப்பாவிற்கு வழக்குச்சொத்திற்கான அனுபந்த பட்டா எந்த வருடம் கொடுக்கப்பட்டது என்று எனக்குத்தெரியாது. எனது நிரூபண வாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் படித்து காண்பித்தார், நான் சொன்ன தகவலின் அடிப்படையில் தான் அதை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

7. 30 வருடத்திற்கு முன்பு வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டோம். வா.சா.ஆ.2 பத்திரத்தில் உள்ள சாட்சிகள் முன்னிலையில் பத்திர எழுத்தரான காளிங்கன் முன்னிலையில் வாய்க்கரலாக பாகம் பிரித்துக்கொண்டதற்காக 1000 ரூபாய் பிரதிவாதிக்கு கொடுத்தேன். பத்திர எழுத்தர் வா.சா.ஆ.2 பத்திரத்தை பதிவு செய்யவேண்டும் என்று சொல்லவில்லை.

8. பிரதிவாதி எந்த தேதியில் வழக்குச்சொத்தில் இடைஞ்சல் செய்ததாக புகார்கொடுத்தேன் என்று தெரியாது. வா.சா.ஆ.1, 2 ஆவணங்கள் எந்த தேதியில் எழுதப்பட்டது என்று எனக்குத்தெரியாது. வழக்குச்சொத்து எங்கள் குடும்ப பொதுச்சொத்து, அது எனக்கு மட்டும் பாத்தியம் பட்டது என்றால் சரியல்ல. நான்தான் பொதுச்சொத்தை ஆக்கிரமிப்பு செய்து அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான்.வழக்குச்சொத்து பொதுச்சொத்து என்பதால் அதை மற்ற வாரிசுகளுக்கும் பங்கு உள்ளது என்றால் சரிதான்.

9. நான் போலியான ஆவணம் தயார் செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள வழக்குப்பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

// Ture Copy //
Tr.M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.